# அலகு - 1

## இயல் அறிமுகம்

இவ்வியலில் திருஞானசம்பந்தரின் வெந்த வெண் நீறணிந்து திருக்கொடி மாட செங்குன்றூர் பதிகமும், திருநாவுக்கரசரின் சொற்றுணை வேதியன் என்ற பாடலும் கொடுக்கப்பட்டுள்ளன.

சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதிற் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் செம்பொருள் வாய்மை வைத்த சீர் தேவாரமும் விளங்கு திருவாசகமும் உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாள் எம உயிர்த்துணையே.

தமிழ் இலக்கியங்களுள் சிறப்பிடத்தைப் பெறுவது பக்தி இலக்கியங்கள். பக்தியும் தமிழும் பிரிக்க முடியாமல் தமிழுலகில் கைகோர்த்து நடைபோட்டன எனலாம். சமணமும் பௌத்தமும் மேலோங்கி இருந்த காலத்தில் சைவமும் வைணவமும் தத்தம் நிலை குலைந்திருந்தன. தமிழ் மண்ணின் தனிப் பெரும் சமயங்கள் மறுமலர்ச்சி பெறவும், தமிழ் மக்களின் இறையுணர்வு சிறக்கவும் தோன்றியவை பக்தி இலக்கியங்கள். சைவத்தில் தேவாரமும், திருவாசகமும், வைணவத்தில் திவ்ய பிரபந்தமும் பக்திக் கடலில் தோன்றிய முத்துக்கள். இவ்விலக்கியங்களின் வாயிலாகத் தேவாரத் திருத்தலங்களின் பண்பாடும், வாழ்க்கையின் நோக்கமும், மறுமைப்பயனின் சிறப்பும், இசை வளங்களும் அறியக் கிடைக்கின்றன. பண்ணார் செஞ்சொல்லெடுத்து சிவபெருமானைப் பாடியவர்கள் சமயக்குரவர்கள். இப்பாடல்கள் தேவாரம் என்று அழைக்கப்பட்டன. வரிப்பாடல்கள், வாரப்பாடல்கள், பரிபாடல் இவையனைத்தும் இசை கலந்து பாடப்படுபவை. இறைவனைப் பாடும் இசை கலந்த தமிழ்பாட்டு தேவாரமானது தமிழ்ப்பாமாலை இறைவனுக்குக் காட்டியதானும் தேவாரமாயிற்று. தெய்வத் தமிழ் மணக்கும் பாடல்களால் தமிழ் வளர்ந்தது; பக்தியும் வளர்ந்தது எனலாம். இவ்வியலில் சைவ இலக்கியங்களில் தேவாரம் என்பதைப் பற்றி அறியலாம்.

# 1. திருஞானசம்பந்தர் - தேவாரம்

(வெந்த வெண்நீறணிந்து - 3ஆம் திருமுறை நமச்சிவாய திருப்பதிகம்)

## ஆசிரியர் வரலாறு

பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்றும் திருஞானசம்பந்தர் அருளியவை. எட்டாம் நூற்றாண்டில் சீர்காழியில் சிவபாத இருதயருக்கும், பகவதி அம்மைக்கும் மகவாய்த் தோன்றியவர். அந்தணர் குலத்தில் தோன்றியவர். குழந்தைப்பருவத்தில் ஒருமுறை தந்தையார் இவரை குளக்கரைக்கு அழைத்துச் சென்றார். அப்பொழுது தந்தை குளத்தில் நீராட மூழ்கிய பொழுது குழந்தை தந்தையைக் காணாமல் அழுதது. அங்கு சிவபெருமான் உமாதேவியாருடன் வந்து பொற்கிண்ணத்தில் ஞானப்பால் அளித்து அருளினார். ஞானப்பாலைக் குடித்ததும் குழந்தைக்கு ஞானம் கிடைத்தது. தந்தை வந்து 'யாரப்பா உனக்கு பாலைக் கொடுத்தது' என்று கேட்டதும் கோயில் கோபுரத்தை காட்டி 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் பாடலை பாடினார். மூன்று வயது குழந்தை பாடல் பாடும் அதிசயம் ஊர் முழுவதும் பரவியது.

சிவஞான முதிர்ச்சி பெற்ற ஞானசம்பந்தர் சிவபெருமானின் பெருமைகளைப் பாடிப் போற்றினார். பண்கள் சிறக்க பல பாடல்களைப் பாடினார். பச்சிளம் கைகளால் தாளம் போட்டுப் பாடினார். கைகள் சிவந்தன. அப்பொழுது இறைவன் திருவருளால் அவர் கைகளில் பொன்னால் ஆன கைத்தாளம் தோன்றியது. பண்ணும் தாளமும் சிறக்கத் தேவாரம் பாடும் பச்சிளம் பாலகனைத் தந்தையார் தோள்மீது ஏற்றிக் கொண்டார். பல கோயில்களுக்குச் சென்று தேவாரப் பதிகங்களைப் பாடினார்.

ஒருமுறை சம்பந்தர் திருப்பாச்சிலாச்சிராம் என்னும் தலத்தை அடைந்தார். அவ்வூரில் கொல்லி மழவன் என்ற சிற்றரசன் இருந்தான். அவன் மகளுக்கு முயலக (தொழுநோய்) நோய் இருந்தது. இதனைக் கண்ட சம்பந்தர் 'துணி வளர் திங்கள்' என்னும் பாடலை பாடி நோயை நீக்கினார்.

இத்தலமானது அக்காலத்தில் மரங்கள் நிறைந்த இடமாக இருந்ததால் கொடிமாடச் செங்குன்றூர் எனப் பெயர் பெற்று ரிஷிகள், தேவர்கள் இருந்ததால் திரு என்னும் அடைமொழியும் பெற்றுள்ளது.

சுமார் 350 ஏக்கர் நிலப்பரப்பில் கடல் மட்டத்திற்கு மேல் 2000 அடிகளில் அமைந்த இத்திருமலைக் கோவிலானது கோயில் அடிவாரத்தில் இருந்து 650 அடி உயரத்தில் 1206 படிகளைப் பெற்றுள்ளது. செம்மலை, மேருமலை, சிவமலை, நாகாசலம், பனிமலை, கோதை மலை, அரவகிரி, பிரம்மகிரி, வாயுமலை, வந்திமலை, கோணகிரி போன்ற பல பெயர்களை உடையதாக உள்ளது.

**புராண வரலாறு**

முன்னொரு காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் போட்டி வந்தது. இருவருக்கும் போர் மூண்டால் உலகம் அழியும் என்பதை உணர்ந்த தேவர்கள் இருவரில் யார் ஆற்றல் மிக்கவர் என்பதை அறிய போட்டி நடத்த வேண்டும் என்றனர். இதில் வாயுதேவன் தோற்கும் நிலை ஏற்படவே வாயுதேவன் காற்றை அடக்கிக் கொண்டார். இதனால் உயிரினங்கள் மயங்கின. இதனால் ஆதிசேடன் தனது பிடியைத் தளர்த்தினார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட வாயுதேவன் ஆதிசேடனின் தலையையும் உடம்பையும் பிய்த்துப் போட்டதாகக் கூறப்படுகிறது. அப்பகுதிகள் பூமியில் விழுந்தன. அவற்றில் ஒன்று இலங்கையாகவும் மற்றொன்று திருக்கொடி மாடச் செங்குன்றூராகவும் மாறியது என்பர்.

**அர்த்தநாரீஸ்வரர் உருவ அமைப்பு**

அர்த்தம் என்றால் பாதி எனவும் நாரீ என்றால் பெண் எனவும், ஈஸ்வரன் என்றால் சிவன் எனவும் பொருள்படும். இறைவன் உலகிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில் இத்தலத்தில் பெண்ணாகவும், ஆணாகவும் இரண்டறக் கலந்து அம்மையப்பன் என்று அழைக்கப்படும்

இவ்விருவரும் காட்சியளிக்கும் சோலைகள் சூழ்ந்த திருக்கொடி மாடச் செங்குன்றூரின்கண் சென்று இறைவனை வழிபடுபவர்களுக்கு வாழ்வில் தடுமாற்றம் என்பது ஒருபோதும் ஏற்படாது.

## மலர்கள் நிறைந்த குன்றூர்

பால் போன்ற திருநீறு அணிந்த மார்பையுடைய சிவபெருமான் கருங்கூந்தலையுடைய பார்வதி தேவியை இடப்பாகமாக உடையவன். இத்தகு தோற்றத்துடன் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கொடி மாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய நீலகண்டன் என்று அழைக்கப்படும் சிவபெருமானை தொழுவது என்பது மகிழ்ச்சியைத் தரும் நீதியாகும்.

## அந்தணர்கள் வாழும் மலை

பெண்களுக்குரிய குணம் கொண்டவனாய், பூணூலும், கொன்றை மலரும், நாகமும் அணிந்த சிவனுடன் பார்வதி தேவி காட்சியளிக்கிறார். அத்தகைய தோற்றத்துடன் அந்தணர்கள் வசிக்கும் திருக்கொடி மாடச் செங்குன்றூரின் கண் கங்கையை தன் சடையில் இருப்பிடமாகக் கொண்டு எழுந்தருளிய சிவபெருமானை வணங்கி மகிழ்வது என்பது நீதியைத் தரும் செயலாகும்.

## உலக மெய்ப்பொருளை உணர்த்தும் மலை

தன் மார்பினில் பூணூலையும், பன்றியின் கொம்பையும் அணிந்து, பனை போன்ற தோள்களையுடைய உமையம்மையை பாகமாகக் கொண்டு சிவபெருமான் காட்சி அளிக்கிறார். அத்தகு தோற்றத்துடன் திருக்கொடி மாடச் செங்குன்றூரின்கண் எழுந்தருளிய சிவனையும், சக்தியையும் வணங்குவதால் உலக மெய்ப்பொருளை உணரலாம்.

## இறைத் தன்மை நிறைந்த மலை

மூன்று பிரிவுகளைக் கொண்ட சூலத்தை ஒரு கையில் உடையவன். கங்கையையும் நிலவையும் தன் சடையில் கொண்டவன். அத்தகு தோற்றத்துடன் பொழில்கள் சூழ்ந்த அழகிய இறைத்தன்மை பொருந்திய செந்நிற மலையான திருக்கொடி மாடச் செங்குன்றூரின்கண் எழுந்தருளிய சிவசக்தியின் திருவடிகளைத் தொழுபவர்கள் தம் தீவினைகளின் பாவம் நீங்கி நல்வினைகள் பெறுவர்.

## கொடிகள் சூழ்ந்த மலை

நீண்டு மலர்ந்துள்ள கொன்றையோடு நிமிர்ந்து தாழ்ந்திருக்கும் சடா முடியை உடையவன். தலையில் வெண்மை நிற பிறைச் சந்திரனைச் சூடியவன். சாம்பல் பூசும் வாழ்வையுடையவன். வளமிக்க கொடிகள் சூழ்ந்த மாடங்களையுடைய செங்குன்றூர் என்னும் ஊரில் வீற்றிருப்பவன். அவனைத் தொழுபவரின் தீவினைகள் தேய்ந்து மறைந்து போகும்.

## வாழ்வின் தத்துவமாக நிற்கும் மலை

சிவபெருமான் தன் சடையின்மீது கொன்றை மலரையும், நிலவையும் அணிந்தவன். அத்தகையவன் குளிர்ச்சி பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருக்கொடி மாடச் செங்குன்றூரின்கண் எழுந்தருளி இருக்கின்றான். வாழ்வின் தத்துவமாக விளங்கும் அப்பெருமானைத் தொழுபவர்கள் வாழ்வில் தடுமாற்றம் இன்றி வாழ்பவர்கள் ஆவார்கள்.

## அடி முடி காண முடியாத சிறப்பு

செம்பொன் போன்ற மேனியை உடையவன். திருமாலும், பிரம்மனும், தேடியும் முறையே அடியையும், முடியையும் காண முடியாது நின்றவன் சிவபெருமான். அத்தகு சிறப்புடைய பெருமான் எழுந்தருளி இருக்கும் திருக்கொடி மாடச் செங்குன்றூரில் உள்ளவனின் திருவடிகளை வணங்கினால் தீவினைகள் யாவும் காணாமல் போய்விடும்.

## வரிக்குயில்கள் நிறைந்த சோலை

போதி மரத்தின் அடியில் தவம் செய்யும் புத்தர்கள் அசோக மர நிழலில் தவம் செய்யும் சமணர்கள் கூறும் தவறான செய்திகளை (வன்புரைகளை) பொருளாகக் கருதும் பேதையர்களே இதனைக் கேளுங்கள். வரிக்குயில்கள் நிறைந்த குளிர்ச்சி பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருக்கொடி மாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய வேதம் அறிந்தவனை தொழுபவர் தம் வினைகள் யாவும் நீங்கி வீடுபேறு அடைவர்.

தமிழுக்கு தலைமகனாகி நின்று தமிழ் ஞானசம்பந்தன் என்று சிறப்புப் பெற்ற திருஞானசம்பந்தர் பாடிய இப்பதிகத்தைப் பாடி சிவபெருமானைத் தொழுதால் கருமவினைகள் நீங்கி இன்பம் பெறலாம் என்பதை இத்தலைப்பின் வழியே அறியலாம்.

- - -

# உ. திருநாவுக்கரசர் - தேவாரம்

(சொற்றுணை வேதியன் - 4ஆம் திருமுறை)

**ஆசிரியர் வரலாறு**

திருமுனைப்பாடி நாட்டில் தெய்வ நெறிச்சிவம் பெருக்கும் திருவாமூர் என்னும் ஊரில் வேளாண் மரபில் குறுக்கையர் குடியில் புகழனார், மாதினியாருக்கு திருமகளாய் திலகவதியார் பிறந்தார். சில ஆண்டுகள் கழித்து மருள்நீக்கியார் பிறந்தார். திலகவதியாருக்கு உரிய பருவம் வந்த பொழுது அவருக்கு கலிப்பகையார் என்ற ஆண்மகனை திருமணம் பேசி முடித்தனர். போரில் கலிப்பகையார் இறந்துவிடவே திலகவதியார் தம்பியை வளர்த்தலையே தலையாகக் கொண்டு வாழ்ந்திருந்தார்.

அக்காலத்தில் சமணம் மேலோங்கியிருந்தது. சமண முனிவர்கள் பாடலிபுத்திரம் போன்ற பகுதிகளில் தங்கித் தம் மதத்தைப் பரப்பினர். இதில் கவரப்பட்ட மருள்நீக்கியார் தருமசேனர் என்னும் பெயரோடு பல விவாதங்களைச் செய்து சிறப்பு பெற்றார். இதனை அறிந்த திலகவதியார் திருவதிகை வீரட்டானம், சிவபெருமானிடம் வேண்டினார். சிவபெருமான் மருள்நீக்கியாருக்கு சூலைநோயைக் கொடுத்தார். சமணர்கள் எவ்வளவோ முயன்றும் மருள்நீக்கியாரைக் குணப்படுத்த முடியவில்லை. தமக்கையாரிடம் வந்து அறிவுரை கேட்டார். அவரும் திருவதிகையை அடைந்து திலகவதியின் கையால் திருநீறு பெற்று 'கூற்றாயினவாறு' என்று தொடங்கும் பதிகம் பாடினார். பாடும் பொழுதே அவரது வயிற்று வலி நீங்கியது. தருமசேனர் நாவுக்கரசர் ஆனார். கோயில்களில் உழவாரப் படை அமைத்து சேவை செய்யத் தொடங்கினார்.

இதை அறிந்த சமணர்கள் அரசரிடம் சென்று தருமசேனர் திருநாவுக்கரசராய் சைவம் மாறிய செய்தியையும் தமது மதத்திற்கு பெரும் துரோகம் செய்துவிட்டதாயும் கூறினர். இதனால் கோபம் கொண்ட அரசர் இவரை சுண்ணாம்பு கால்வாய்க்குள் அடைக்கச் செய்தனர்.

### சிவபிரானின் அணிகலன்

லட்சுமி தேவியும், சரஸ்வதி தேவியும் உறையும் இடம் என்பதால் பூக்களுள் சிறந்தது தாமரை. பசுவிற்கு அணிகலன் பஞ்ச கௌவியத்தை அளிப்பதால் (பால், தயிர், பசுஞ்சாணி, நெய், கோமியம்). மன்னனுக்கு அணிகலனாகத் திகழ்வது நடுநிலை நெறி தவறாமல் நடந்து கொள்ளும் தன்மை. நாக்குகளுக்கு அரிய ஆபரணம் போலத் திகழ்வது 'நமச்சிவாய' என்னும் மந்திரமாகும்.

### பாவங்களைச் சுட்டெரிக்கும் மந்திரம்

ஆகாயம் வரை மிகவும் உயரமாக கட்டைகள் வைக்கப்பட்டுள்ள குவியல் ஆயினும், ஒரு தீப்பொறி அந்த அடுக்கில் படர்ந்து பற்றிக் கொண்டால் அனைத்துக் கட்டைகளும் சாம்பலாக மாறி ஒன்றும் இல்லாத நிலை ஏற்படுவதைப் போல, நாம் இந்த உலகில் தொடர்ந்து செய்த பாவங்கள் எத்தனையாயினும் அவை அனைத்தையும் சுட்டெரிக்கும் தன்மை வாய்ந்தது நமச்சிவாய என்னும் மந்திரமாகும்.

### துன்பத்தில் இருந்து காப்பாற்றும் மலை

எந்த வகையான துன்பம் நேர்ந்தாலும் சிவபெருமானை அன்றி மற்றோரிடத்து 'எம் துன்பத்தை நீக்குவாய்' என்று முறையிட மாட்டோம். இராவணன் பெரிய மலையின் கீழ் சிக்குண்டதைப் போல அகப்பட்டுக் கிடந்தாலும் நமக்கு நடுக்கத்தைப் போக்கி மிகப்பெரிய துணிவைக் கொடுப்பது நமச்சிவாய என்னும் மந்திரமே.

### பக்தர்களுக்கு அணி சேர்ப்பது

பல வகையான விரதங்களை மேற்கொண்டு தவம் செய்து மெய்ப்பொருளை நாடும் முனிவர்களுக்கு அழகு சேர்ப்பது அவர்கள் அணியும் திருநீறாகும். அந்தணர்க்கு பெருமை சேர்ப்பது அவர்கள் நான்மறைகளையும் ஆறு அங்கங்களையும் கற்றுத் தேர்ந்தவராக இருத்தல். இந்திரனுக்கு அழகு சேர்ப்பது அவன் சிவபெருமானைச் சரண் அடைந்து அவரது திருமுடியில்

இடம் பெற்று இருக்கும் நிலை, சைவர்களாகிய நம் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் அணிகலனாக விளங்குவது நமச்சிவாய (சிவாயநம) என்னும் ஐந்தெழுத்து மந்திரமாகும்.

**அடியார்களுக்கு நன்மை**

சிவபெருமான் ஒரு சார்பும் இல்லாது அனைவருக்கும் அருள் புரியும் தன்மையினன். தன்னைச் சேர்ந்த அடியார்களுக்கு எப்போதும் நன்மை செய்பவன். சிவபிரான் தன்னைச் சாராதவர்களுக்கு நன்மை அளிக்காதவன். நற்குலத்தில் பிறவாதாரும், சிவபெருமானின் நாமத்தை ஓதினால் அவர்களுக்கும் நற்குலத்தோர் அடையும் நன்மைகளை அளிப்பவன் சிவபெருமான்.

**பற்றுக பற்று**

வீடுபேறு அடையும் நோக்கத்துடன் உலகப் பற்றை விட்டொழித்த சிறந்த தொண்டர்கள் ஒன்றுகூடி சிவநெறியைச் சிந்தித்தனர். நானும் அவர்களைப் பின்பற்றிச் சென்று அவர்கள் கூறிய அஞ்செழுத்து மந்திரத்தைப் பற்றினேன். அந்த நமச்சிவாய மந்திரமும் என்னைப் பற்றிக் கொண்டு பல நன்மைகளைப் புரிந்தது.

**அறியாமை விலகுதல்**

நமச்சிவாய மந்திரம் நமது உள்ளத்தில் ஞான விளக்காக நின்று நம்மைப் பிணைத்திருக்கும் மலங்களை அகற்ற வல்லது; சொற்களுக்குத் துணையாக நின்று சொற்களுக்குப் பொருளை அளிக்கக்கூடியது; என்றும் நிலைத்து நிற்பது; பல்லாயிரக்கணக்கான உயிர்களின் உள்ளே நிற்பது; பக்குவப்பட்ட நிலையில் நின்று பாசங்களை அறுத்து பலரும் காண்பது; நல்ல உள்ளங்களில் வீற்றிருப்பது ஆகும்.

**துன்பங்களில் இருந்து விடுதலை**

முதல்வனாகிய முக்கண்ணனே! உலகில் முதன் முதலாகத் தோன்றிய நெறியானவனே! சிறப்பு வாய்ந்த சிவபிரானின் செம்மையான நெறியை உறுதியுடன் சரணம் என்று வாழும் அடியார்களுக்கெல்லாம் மிகவும் நன்மை பயப்பதான வீடுபேறு எனப்படும் நன்னெறியை அளிப்பது நமச்சிவாய என்னும் மந்திரமாகும்.

**கடைக்காப்பு**

மான் கன்றை இடது கையில் ஏந்தியும், இடது பாகத்தில் உமையம்மையை ஏற்றுக் கொண்டும் காட்சி அளிக்கும் சிவபிரானின் திருவடிகளை அனைவரும் மலர்தூவி வழிபடுவதால் எப்போதும் பூக்களுடன் இணைபிரியாது இருக்கும் திருவடிகளை நமது மனத்தினால் பொருத்தி நமது நாவுடன் நமச்சிவாயப் பதிகத்தைப் பிணைத்து சிவபிரானைப் புகழ்ந்து பாட வல்லவர்களுக்கு எத்தகைய துயரமும் ஏற்படாது.

துன்பங்கள் நம்மைத் தாக்கும் போது நம்முடன் இருந்து காக்கும் திருவைந்தெழுத்தினை நினைத்து நாவுக்கரசர் நிரம்பிய அன்புடன் இந்த பதிகத்தைப் பாடியவுடன், கடலில் நாவுக்கரசரை பிணைத்துக் கட்டியிருந்த கல் மிதந்தது என்றும், கயிறுகள் அறுந்தன என்றும் கூறுகின்றனர். நல்வினை தீவினை என்றும் இருவினைப் பாசங்கள் ஆணவம் மலம் என்ற கல்லுடன் இறுகப் பிணித்திலர். பிறவிக்கடலில் விழும் உயிர்களைக் கரையேற்றும் ஒரே மந்திரம் ஐந்தெழுத்து மந்திரமே.

- - -

# அலகு - 2

**இயல் அறிமுகம்**

இவ்வியலில் சுந்தரர் பாடிய தேவாரத்தில் பொன்னார் மேனியனே பாடலும், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில் அச்சோப் பதிகத்தில் 13 பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சுந்தரர் பாடிய தேவாரத்தைப் பற்றியும் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தைப் பற்றியும் இவ்வியலில் காண்போம்.

## 3. சுந்தரர் - தேவாரம்

(பொன்னார்மேனியனே - 10 பாடல்கள்)

**ஆசிரியர் வரலாறு**

சுந்தரமூர்த்தி நாயனார் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூர் என்னும் ஊரில் சடையனார் - இசைஞானியார் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் ஆதி சைவர் என்னும் குலத்தைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் நம்பியாரூரன் என்பதாகும். நம்பியாரூரன் என்பதை ஆரூரன், ஆரூரார் என்றும் அழைப்பர். இவருடைய அழகைக் கண்டு சிவபெருமானே சுந்தரர் என்று அழைத்தமையால் அப்பெயரிலேயே அறியப்படுகின்றார்.

சுந்தரர் சிறுவயதில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தபோது திருமுனைப்பாடி அரசர் நரசிங்க முனையாரைக் கண்டார். சுந்தரரின் அழகில் மயங்கி அவரைத் தத்தெடுத்து இளவரசரைப் போல வளர்த்தார். அவரும் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தார்.

மணப்பருவம் அடைந்தபோது சுந்தரருக்கு புத்தூரில் உள்ள சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. மணநாளன்று முதியவர் வடிவில் அங்கு வந்த இறைவன் சுந்தரருடைய பாட்டனார் எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட ஓர் ஓலையைக் காட்டி சுந்தரரும், அவர் வழித் தோன்றல்களும் தனக்கு அடிமை என்றார். திருமணம் தடைப்பட சுந்தரரை அழைத்துக் கொண்டு திருவெண்ணெய்நல்லூரில் திருவருட்துறை கோயிலுள் நுழைந்த வயோதிகர் திடீரென மறைந்தார்.

## மாணிக்கம் போல்பவனே!

பொன்போன்ற திருமேனியை உடையவனே! இடுப்பின்கண் புலித்தோலை அணிந்தவனே! மின்னல் போன்று ஒளிவீசும் கொன்றைப் பூவை தலையில் சூடியவனே! சிறப்புடைய தலைவனே! விலையுயர்ந்த இரத்தினம் போல்பவனே! திருமழப்பாடியில் திகழும் மாணிக்கம் போல்பவனே! எனக்குத் தாய் போல்பவனே! இப்பொழுது நான் உன்னையன்றி வேறு யாரை நினைக்க முடியும்?

## புகலிடம் அடைந்தேன்

கிழிந்த ஆடைகளை அணிந்திருப்பவனே! திருநீற்றை திருமேனியிற் பூசியிருப்பவனே! யாவர்க்கும் தலைவனே! வாள் போன்ற கண்களையுடைய உமாதேவியை உடைய ஒரு பங்கினனே! திருமழப்பாடியில் திகழும் மாணிக்கம் போல்பவனே! அடியேன் உனது திருவடியையே புகலிடமாக வந்து அடைந்தேன். இனி உன்னையல்லாது வேறு யாரை நான் உறவினனாக நினைக்க முடியும்? என்னை நீ ஏற்றுக்கொள்வாயாக!

## மாஞ்சோலை

மேகம் தவழும் அழகிய மாஞ்சோலைகள் சூழ்ந்த திருமழப்பாடியில் திகழும் மாணிக்கம் போல்பவனே! எங்கள் தலைவனே! என் தந்தை என் தாய் என்று இவர்கள் எனக்கு எள்ளளவும் துணையாக மாட்டார். அவர்களைத் துணையாக நினைத்து தான் இந்த நிலையில்லாத பிறவியை எடுத்து இளைத்துப் போனேன். ஆகையால் இப்பொழுது உன்னையல்லாது வேறு யாரை நினைப்பேன்?

## வானுலகில் வாழ்பவன்

வண்டுகள் ஆரவாரிக்கும் பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழப்பாடியில் திகழும் மாணிக்கம் போல்பவனே! வானுலகில் வாழ்பவனே! உனக்கு அடியவனாகிய நான் அப்பொழுதே உன் அடியார் அவர்க்கு அடியாராயினார்

மேற்கொண்டு விட்டேன்.
ஆகிய எல்லார்க்கும் தொண்டு செய்தலை
உன்னோடாயினும் உன் அடியாரோடாயினும் தொடர்பு கொள்ளாத குற்றம் என்பால் இல்லாதவாறு அதைக் களைந்தொழிந்தேன். ஆதலின் இனி, யான் உன்னையன்றி வேறு யாரை நினைப்பேன்?

**பூஞ்சோலைகள்**

ஏழுலகங்களிலும் உள்ள எல்லா உயிர்கட்கும் அறிவாகியும், பண் அமைந்த இனிய தமிழ்ப் பாடலாகியும், எல்லா பொருட்டும் மேலாயும் உள்ள மேலான ஒளியே! நிலம் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழப்பாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே! தலைவனே! இப்பொழுது யான் உன்னைத் தவிர வேறு யாரை நினைப்பேன்?

**அடியார்க்கு அடியவன்**

அடியவர்கட்கு, முடிவில்லாத வாழ்நாளைக் கொடுக்கும் திருமழப்பாடியில் திகழும் மாணிக்கம் போல்பவனே! உனக்கு நான் ஆளாயின பின், உன்னையல்லாது வேறு யாரை நினைப்பேன்? எனக்கு இறுதிநாள் வந்து நெருங்கித் துன்புறுத்துவதற்கு முன்பே உனக்கு நான் ஆளாதற் பொருட்டு வந்து உன்னை அடைந்தேனாதலின் அடியேனையும் உனக்கு உரியவனாக நீ ஏற்றுக் கொண்டருள்.

**பிறையை அணிந்தவனே**

பொருந்து வாய் உடைய குழையை அணிந்தவனே! சடையின்கண் பிறையைத் தாங்கியுள்ளவனே! வெந்து நிறைந்த நல்ல வெண்மையான திருநீற்றை அணிந்தவனே! இடபத்தை ஏறும் ஊர்தியாகக் கொண்ட சதுரப்பாட்டினை உடையவனே! அழகு பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருமழப்பாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே! என் தந்தையே! நான் உன்னையல்லாது வேறு யாரை நினை...

வெப்பமான விரியும் கதிர்களையுடைய பகலவன் முதலான மிகுந்த தேவர் கூட்டங்கள் எல்லாம் நல்ல மலர்களை இட்டு வழிபட, அவர்கட்கு மிகவும் நேர் நின்று அருள் செய்பவனே! இருள் நிறைந்த அழகிய சோலைகள் சூழ்ந்த திருமழப்பாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே! என் தலைவனே! அடியேன் இப்பொழுது உன்னையல்லாது வேறு யாரை நினைப்பேன்.

## தியானப் பொருள் ஆனவன்

உயிர்களுக்கு எல்லாம் நன்னெறியாக நிற்பவனே! மலத்தாற் பற்றப்படாதவனே! நீண்ட திருமாலும் பிரமனும் ஏத்தெடுக்கும் தியானப் பொருளே! நற்பண்புடையவனே! கொடிபோலும் இடையை உடைய பார்வதி தேவியின் கணவனே! மான் கன்று பொருந்திய அகங்கையையுடையவனே! திருமழப்பாடியுள் திகழும் மாணிக்கமே! அறிவு வடிவானவனே! அடியேன் இப்பொழுது உன்னையல்லாது வேறு யாரை நினைப்பேன்?

## காப்பு (பாட வல்லவர்கள்)

அழகு பொருந்திய மூன்று புரங்களும், எரிந்து அழியுமாறு வில்லை வளைத்தவனும், கச்சால் கட்டப்பட்ட தனங்களையுடையவளாகிய உமாதேவியுடன் திருமழப்பாடியுள் விரும்பி வீற்றிருப்பவனும் ஆகிய சிவபெருமானை புகழ் நிறைந்த திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவனாகிய நம்பியாரூரான் பாடிய இத்தமிழ்ப் பாடல்களைப் பாட வல்லவர்களாகிய மக்கள் சிவலோகத்தில் சிவனுடன் இருக்கும் நல்வினையைப் பெற்றவர்கள் ஆவர்.

# 4. மாணிக்கவாசகர் - திருவாசகம்

(அச்சோப்பதிகம் - 13 பாடல்கள்)

சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவர் மாணிக்கவாசகர். மூவர் தேவாரம் பாட, மாணிக்கவாசகர் திருவாசகத்தையும், திருக்கோவையையும், திருவெம்பாவையையும் இயற்றினார். இவர் 9ஆம் நூற்றாண்டு வரகுணபாண்டியன் காலத்தைச் சேர்ந்தவர். அரிமர்த்தன பாண்டியன் தலைமை அமைச்சராகப் பணியாற்றியவர்.

திருவாதவூரில் சம்புபாத சாரியாருக்கும் சிவஞானவதிக்கும் மகனாகப் பிறந்தவர். தனது புலமையால் 'தென்னவன் பிரம்மராயன்' என்ற பட்டத்தைப் பெற்ற மாணிக்கவாசகர் உயர்ந்த பதவி, செல்வம், செல்வாக்கு எல்லாம் இருந்த போதும் இவை வாழ்வின் நோக்கமல்ல என்று உணர்ந்து சைவத்தைப் பின்பற்றத் தொடங்கினார்.

ஒருமுறை பாண்டிய மன்னன் சோழ நாட்டில் நல்ல குதிரைகள் வந்திருக்கின்றன என்று கேள்விப்பட்டு, அமைச்சர் மாணிக்கவாசகரிடம் பொன்னைக் கொடுத்து குதிரைகளை வாங்கி வரும்படி பணித்தான். மாணிக்கவாசகர் பொன்னோடு திருப்பெருந்துறையை அடைந்தார். அங்கே குருந்த மரத்தின் அடியில் சிவபெருமானே குரு வடிவு எடுத்து அமர்ந்திருந்தார். அவர் முன் சென்று மாணிக்கவாசகர் பணிந்தார். குருந்த மரத்தின் அடியில் மாணிக்கவாசகரை சிவபெருமான் ஆட்கொண்டார்.

இதை அறிந்த மன்னன் மாணிக்கவாசகரை உடனே குதிரைகளுடன் வரும்படி ஓலை அனுப்பினான். ஆகவே மாணிக்கவாசகர் சிவபெருமானிடம் புலம்பினார். சிவபெருமான், காட்டில் உள்ள நரிகளை குதிரைகளாகவும், சிவகணங்களை குதிரை வீரர்களாகவும் மாற்றி அனுப்பினார். குதிரைகளைக் கண்ட அரசன் மிகவும் அகம் மகிழ்ந்தான். ஆனால் அன்றிரவே குதிரைகள் மீண்டும் நரிகளாக மாறி அந்தக் கொட்டடியில் இருந்த குதிரைகளையும்

கடித்து விட்டு ஓடின. ஆகையால் அரிமர்த்தன பாண்டியன் மிகவும் கோபம் கொண்டான். கொடுத்த பொன்னையெல்லாம் திருப்பித் தரும்வரை திருவாதவூராரை வைகையாற்றுச் சுடுமணலில் நிறுத்தி வைக்குமாறு கூறினான்.

சிவபெருமானுக்கு அடியவரின் துன்பம் பொறுக்கவில்லை. கங்கையை வைகையில் பெருக்கெடுக்கச் செய்கிறார். ஆறு பெருக்கெடுத்துக் கரையை உடைத்துக் கொண்டு ஆறு பெருக்கெடுத்து ஓடத் தொடங்கிவிட்டது. உடனே பாண்டியன், வீட்டுக்கு ஓர் இளைஞன் வைகைக் கரையை அடைக்க வேண்டும் என்று முரசு அறைவிக்கிறான். வந்திக் கிழவி என்னும் ஒரே ஒரு கிழவி மட்டும் வீட்டில் யாருமில்லாமலும் ஏவலாளர் இல்லாமலும் யோசித்துக் கொண்டிருக்கையில் சிவபெருமானே ஓர் இளைஞன் வடிவில் வந்தியிடம் வந்து வேலை செய்யட்டுமா என்று கேட்கிறார், 'செய், ஆனால் உதிர்ந்த பிட்டு மட்டுமே தருவேன்' என்று கூறுகின்றாள். அதற்கு உடன்பட்ட சிவபெருமான் தனது வேலையைத் தொடங்குகிறார்.

அன்றைக்கென்று வந்திக்கு எல்லாப் பிட்டும் உதிர்ந்து போகிறது. இளைஞனான சிவபெருமான் மூக்கு முட்டச் சாப்பிட்டுவிட்டு, மர நிழலில் துண்டை விரித்துத் தூங்குகின்றான். மன்னன் சென்று பார்க்கின்றான். கரையில் மற்றவர் பங்குகள் அடைபட்டுக் கிடக்கின்றன. வந்தியின் பகுதி உடைந்தே கிடக்கிறது.

கோபம் கொண்ட அரசன் கூலியாளைப் பிரம்பால் அடித்தான். கூலியாளோ, ஒரு கூடை மண்ணை உடைப்பில் கொட்ட, அது மாயமாகச் சரியாகிவிட்டது. அவன் மறைந்து போனான். ஆனால் அவன்மீது பட்ட பிரம்படி உலகெல்லாம் உள்ள அனைத்து உயிர்களின் மேலும், கருவில் இருந்த குழந்தைகள் மீதும் படவே பாண்டியன் கலங்கிப் போனான். அப்போது சிவபிரானின் குரல் அசரீரியாய் கேட்டது. மன்னவா! வாதவூராரின் பொருட்டு இத்திருவிளையாடலை நாம் செய்தோம். இதனை அறியாது நீ கோபம்

கெட்ட வழியை நல்ல வழியாக நினைத்த என்னைத் தாழ்ந்த வழிகளில் சேராதவாறும் தன் திருவருளையே சேரும்வண்ணமாகவும் இறைவன் தன் திருவிளையாடலைச் செய்தான். அவ்விறைவன் அருளிய பேற்றைப் பெற வல்லார் வேறு யாவர்?

பொய்யை மெய்யென்று கருதி மாதர் இன்பத்தில் மயங்கி நின்ற என்னை அழியாமல் காத்தருளித் தனது திருவடியையே அடையும்வண்ணம் இறைவன் அருள்பாலித்தான். எனக்கருள் செய்த இப்பேற்றைப் பெற வல்லார் வேறு யாவர்?

மண்ணுலகில் பிறந்து இளைத்து மடிந்து விழும் தன்மை உடையவனாகவே நான் இருந்தேன். அத்தகைய என்னை எல்லையற்ற அன்பு செய்து ஆட்கொண்டாய். என்னையும் நீ அணியும் திருநீற்றுப் பொடியை அணியுமாறு செய்தாய். அண்ணலே! தூய நெறியில் நான் செல்லும்வண்ணம் எனக்கு அருள் வழங்கினாய். அந்த அருளைப் போல, என்னையன்றி வேறு யாரால் உன்னிடம் இருந்து பெற முடியும்? இதுவும் ஓர் அதிசயம் என்கிறார் மாணிக்கவாசகர்.

பஞ்சைப் போல மென்மையான பாதங்களை உடைய பெண்ணின் கடைக்கண் பார்வை தாக்கியதால் நெஞ்சிலே பெருந்துயரம் கண்டு நின்றேன். அத்தகைய நானும் உன் அருளைப் பெற்றேன். அதனால் தப்பித்துக் கொண்டேன். என்னை அடிமையாகக் கொண்டவனே! என்னை வருக என்றழைத்து 'அஞ்சாதே' என்று அடைக்கலம் கொடுத்து அருள் செய்தவனே! நீ எனக்கு அருள் செய்த அந்தத் தன்மையைப்போல வேறு யாரால் தான் உன்னிடமிருந்து பெறமுடியும்? இதுவும் ஓர் அதிசயமே ஆகும்.

வெந்து அழிகின்ற மானிடப்பிறவியை நான் உண்மை என்றெண்ணித் தீவினைகளையே மேலும் மேலும் சேர்த்துக் கொண்டிருந்தேன். பூங்கொத்துக்களைச் சூடிய கூந்தலையும் சங்கு வளையல்களையும் உடைய

பெண்களின்மீது ஆசைப்பட்டுக் கிடந்தேன். அத்தகைய எனது பற்றை அறுத்து ஆட்கொண்டாய். எனது தீய குணங்களையும், இன்னபிற குற்றங்களையும் ஒழித்தாய். இறுதியாய் கிடைக்கவிருக்கும் நற்கதியையும் அளித்தாய். எனக்கு கிடைத்த அருளைப்போல வேறு யாரால்தான் உன்னிடமிருந்து பெற முடியும்? இதுவும் ஓர் அதிசயம் ஆகும்.

பெண்கள் தரும் மயக்கத்திலே ஆட்பட்டு அழிந்து போக இருந்தேன். அத்தகைய என்னை மெதுவாக அழைத்து வந்தாய். எனது பாசம் என்னும் தாழ்ப்பாளை உருவிவிட்டாய். நான் நற்கதி பெறும் வழியையும் காட்டினாய். ஓங்காரமாகிய பிரணவ மந்திரத்தின் உட்பொருளையும் அருளினாய். ஐயனே! நீ அருளியதைப் போல வேறு யாரால்தான் உன்னிடமிருந்து பெற முடியும். இதுவும் ஓர் அதிசயம் தான் என்கிறார்.

பிறப்பு, இறப்பு என்னும் பெரிய சூழலிலே அகப்பட்டுத் தடுமாறினேன். அணிகலன்களை அணிந்த அழகான பெண்களின் இன்பத்தில் ஆசை கொண்டு வீழ்ந்தேன். இத்தகைய என்னை, உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்ட எம்பிரானாகிய நீ, உனது திருவடிகளை வந்தடையுமாறு அருளினாய். ஆதி முதல்வனே அவ்வாறு நீ எனக்கு அருளியதைப் போல, உன்னிடமிருந்து வேறு யாரால் பெற முடியும்? இதுவும் ஓர் அதிசயம் தான் என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

எல்லாவற்றிற்கும் முதலாக விளங்கும் முதல்வனே! நன்னெறிகளை அறியாத மூடர்களோடு சேர்ந்து நான் அலைந்து கொண்டிருந்தேன். நீ எனது மூவகைப்பட்ட பற்றுகளை எல்லாம் அறுத்து வீசினாய். என்னையும் உனக்கு அடிமையாக்கிக் கொண்டாய். ஒன்றுக்கும் உதவாத என்னையும் ஒரு பொருளாக மதித்தாய். நாயை பல்லக்கின் மீது ஏற்றுவதைப்போல, என்னையும் ஏற்றி வைத்தாய். தாய் போன்றவளாகிய நீ எனக்கு அருளிய தன்மையைப் போல மற்றொருவர் உன்னிடமிருந்து பெற முடியுமா? இதுவும் ஓர் அதிசயம் ஆகும்.

# 5. நம்மாழ்வார்

(உயர்வற உயர்நலம் உடையவன்- 10 பாடல்கள்)

## நூலாசிரியர் வரலாறு

வேளாண் குடியில் வாழ்ந்த பக்தர்களான காரியார் என்பவருக்கும் அவர் மனைவி உடைய நங்கையாருக்கும் வைகாசி விசாகத்தன்று திருக்கருகூரில் (ஆழ்வார் திருநகரி) நம்மாழ்வார் பிறந்தார். பிறந்தது முதல் உண்ணாமல் அழாமல் இருப்பதைக் கண்டு மனம் வருந்தியப் பெற்றோர்கள் திருநகரியில் உள்ள ஆதிபிரான் கோவிலில் குழந்தையைக் கிடத்தி இறைவனிடம் பிரார்த்தித்தனர். அப்பொழுது அதுவரை அசையாது இருந்த குழந்தை அங்கே இருந்த ஒரு புளிய மரத்தடிக்குத் தவழ்ந்து சென்று அந்த மரத்தில் உள்ள பொந்தில் உட்கார்ந்து கொண்டது. மற்ற குழந்தைகளைவிட மாறுபட்டு இருந்ததால் மாறன் என்று பெயரிட்டனர். அக்குழந்தை பதினாறு ஆண்டுகள் அந்த பொந்திலேயே அமர்ந்திருந்தது. இதற்கு ஒரு கதையும் உண்டு.

இராமாவதாரம் முடிவுக்கு வரும் தருவாயில் யமதர்மன் இராமனுடன் பேச வந்தார். அப்போது இராமன் இலக்குவனிடம் யார் வந்தாலும் உள்ளே விடக் கூடாது என்று கட்டளை இட்டுச் சென்றார். அப்போது மகா கோபியான துர்வாசர் வந்து இராமனைப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறார். தடுத்தும் கேட்கவில்லை. நாட்டு மக்களை சபித்து விடுவேன் என்று கூறியதால் தனக்கு இதனால் எத்துன்பம்வரினும் பரவாயில்லை என்று இலக்குவன் உள்ளே சென்று துர்வாசர் வந்த செய்தியை கூற அதனால் இலக்குவன் மரமாக வேண்டிய சாபம் ஏற்படுகிறது. அப்போது ராமர் நான் கலியுகத்தில் ஆழ்வாராக அவதரிக்க உள்ளேன். அப்பொழுது அங்கு புளிய மரமாக நில் என்று கூறுகின்றார். அந்த புளிய மரத்தைத் தான் மாறன் தனது இருப்பிடமாக

உணர்ந்து கொள்ளும் பொறியுணர்வாகவும் இல்லை, என்றாலும் இனிக்கும் உணர்வாகவும், முழுமையான நலமாகவும் இருக்கின்றான். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் இன்னவற்றில் இல்லாதவன் என்றவாறு என் நல்லுயிரில் மிகுந்திருக்கின்றான். இவனுக்கு மேலானவர் இல்லை.

அது இல்லாதவன், இது உடையவன் என நினைத்துப் பார்க்க முடியாதவன். நிலத்திலும், விசும்பிலும் உருவம் கொண்டவனாகவும், உருவம் இல்லாத அருவம் ஆகவும் இருக்கின்றான். அவன் புலனொடு புலன் நலம் ஒழிவில்லாதவனாகப் பரந்து கிடக்கின்றான். இப்படிப்பட்ட நலம் உடையவனை நட்பாக்கிக் கொள்ள நாம் நெருங்குகின்றோம்.

அவர் எப்படி இருக்கிறார்? நாமாக, எங்கோ இருக்கும் அவனாக, இங்கே இருக்கும் இவனாக, தூரத்தில் தெரியும் உவனாக, அதைப் போல அவளாக, இவளாக, உவளாக, தனித்தியங்கும் தாமாக, அவராக, இவராக, உவராக, அதுவாக, இதுவாக, உதுவாக எது என வினவும் படியாக, இவையாக உவையாக, அவ்வவ்வற்றின் நலமாக நீங்கா அவை அனைத்தும் எதிர்காலத்தில் ஆமவையாக, இறந்த காலத்தில ஆயவையாக, நிகழ்காலத்தில் ஆய்நின்றவையாக இருக்கின்றார்.

உலகில் வாழும் மக்கள் அனைவரும் தமது அறிவு அறிந்த அறிகின்ற, அறியும் வகை வகையான கோணங்களில் அவரவர் கடவுள் என இறைவனடியை அடைவார்கள். அவரவர் தெய்வங்கள் குறை இல்லாதவர்கள். அவரவர் விதி வழியே அவரவர் தெய்வம் அமையப்பெற்று வழிபடுகின்றனர்.

அவர் திட்பமானவர். அவர் நிற்கிறார், அமர்ந்து இருக்கிறார், பள்ளிகொண்டிருக்கிறார், திரிகிறார். நிற்கவில்லை, அமர்ந்திருக்கவில்லை, பள்ளிகொண்டிருக்கவில்லை, திரியவில்லை என்னும் ஓர் இயல்பை உடையவர் என்றெல்லாம் நினைக்க முடியாத ஓர் இயல்பும் அவருக்கு உண்டு.

திப்பொருள் என்பவை விசும்பு, ஏரி, வளி, நீர், நிலம் ஆகியவையும் அவற்றில் படரும் பொருளும் ஆகும். அவற்றின் உடலில் உயிராக அவன் மறைந்து கொண்டிருக்கின்றான். உடலில் பரவியும் இருக்கின்றான். இவற்றைக் கூறும் வேத இசைச் சுருதிக்குள்ளே அதையும் விழுங்கிய சுரமாக இருக்கின்றான்.

சுரர் என்னும் தேவர் அறிவுக்கும், அருநிலையாக உள்ளான். விண் முதலாகத் தோன்றி வளரும் அனைத்தையும் உண்டு மகிழும் பரனுக்கு பரண் அவன். முப்புரங்களை எரித்து, அரணாகவும் அயனாகவும் உலகை அழித்து அமைத்துக் கொண்டு இருக்கின்றான்.

அவன் உள்ளான் எனில் உள்ளான். அவன் இவ்வுருவம் எனில் அந்த உருவங்களில் இருக்கின்றான். அவன் உளன் அல்லன் எனில் அவன் அருவம் இந்த அருவங்கள். இப்படி உளன் எனவும் இலன் எனவும் கூறும் பண்புகளை உடையவன். ஆதலால் இருக்கின்ற அவன் இரண்டு தகைமைத் தன்மைகளோடும் ஒழிவில்லாதவனாகப் பரந்து இருக்கின்றான்.

பரந்து அகன்ற, அகல்கின்ற, அகலும் கடல் நீர்த்துளி அனைத்திலும் பரந்து கிடக்கின்றான். பரந்த அண்டம் இறு என நிலம் விசும்பு எங்கும் எதையும் விடாமல் மறைத்துக் கொண்டு ஒவ்வொரு இடத்திலும் அவ்விடத்தில் உள்ள ஒவ்வொரு பொருளிலும் மறைத்து கொண்டு அவற்றை உண்ட மறையாளனாக இருக்கிறான்.

இந்த பத்துப் பாடல்களும் அவன் இருக்கும் வீட்டைப் பற்றியவை. நம் கையில் இருக்கும் விசும்பு, ஏரி, வளி, நீர், நிலம் இவற்றில் உள்ளவராக சொல்லும்படி உளத்திறல், உடல் வலிமை, அளிக்கும் கொடைப்பண்பு தீங்கு செய்தால் பொறுத்துக் கொள்ளும் பண்பு ஆகியனவாக உள்ள இந்த பரண் திருவடிமேல் குருகூர்ச் சடகோபன் சொன்ன நிரல் நிறை ஆயிரம் பாடல்களில் இவை பத்தும் வீடுபேற்றைப் பற்றியவை ஆகும்.

# 6. ஆண்டாள் - திருப்பாவை

(முழுவதும்)

**ஆசிரியர் குறிப்பு**

தமிழகத்தில் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களில் ஆண்டாளும் ஒருவர். வைணவம் போற்றும் 12 ஆழ்வார்களில் இவர் ஒருவரே பெண் ஆழ்வார். வைணவ சமய நூல்கள் கூறும் இவரது வரலாறு இறைவன்மீது இவர் கொண்டிருந்த காதலை விளக்கும் வித்தியாசமான ஒரு வரலாறாகும். ஆண்டாள் பூமித்தாயின் அவதாரமாய் கருதப்படுகிறார்.

மதுரைக்கு அருகில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் ஊரில் துளசிச் செடியின் கீழ் ஆண்டாள் குழந்தையாகக் கிடந்தாள். அவ்வூரில் வாழ்ந்த விஷ்ணுசித்தர் (பெரியாழ்வார்) என்னும் அந்தணர் அக்குழந்தையைக் கண்டெடுத்து வளர்த்தார். இவ்வந்தணர் திருவில்லிபுத்தூர் கோயிலுக்கு மலர்கள் கொய்து கொடுப்பதைத் தமது கடமையாகக் கொண்டவர். தனக்கெனக் குடும்பம் ஏதும் இல்லாதிருந்த நிலையிலும் குழந்தை தனக்கு இறைவனால் வழங்கப்பட்ட கொடை என்று எண்ணினார். இறைவன் கைங்கரியம் செய்ய கடவுளால் வழங்கப்பட்ட இக்குழந்தையை பெருமையாக பெரியாழ்வார் வளர்த்தார். அக்குழந்தைக்கு அவர் இட்ட பெயர் கோதை.

இளம் வயதிலேயே சமயம், தமிழ் என்னும் தொடர்பில் தனக்குத் தெரிந்த அனைத்தையும் விஷ்ணுசித்தர் கோதைக்கு சொல்லிக் கொடுத்தார். இதனால் கோதை இளம் வயதிலேயே கண்ணன்மீது மிகுந்த பக்தியுணர்வு கொண்டவராயும் தமிழில் நல்ல புலமை மிக்கவராகவும் இருந்தார். சிறு வயதிலேயே கண்ணன் மீதிருந்த அளவற்ற அன்பால் அவனையே மணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தையும் வளர்த்துக் கொண்டார். தன்னைக் கண்ணனின் மணப்பெண்ணாக நினைத்துப் பாவனை செய்து கொண்டிருந்தார். கோயிலில் இறைவனுக்கு அணிவி...
தொடுத்து ...

**வையத்து வாழ்வீர்கள்**

வையத்தில் இன்பமாக வாழும் மக்களே! நாம் பாவை நோன்பு மேற்கொள்ளும் போது சில விதிமுறைகளைப் பின்பற்றுவோம். பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பரமனை எண்ணி நெய் உண்ணாமல், பால் உண்ணாமல், விடியற்காலையில் நீராடுவோம். கண்களுக்கு மை தீட்டாமல், மலர் சூடாமல், பிறருக்கு தானம் செய்தல், நற்சொல் பேசுதல் ஆகியவற்றைப் பின்பற்றி நோன்பு நோற்போம் என்கின்றனர்.

**ஓங்கி உலகளந்த உத்தமன்**

இப்பாடல் வாமன அவதாரத்தைக் குறிப்பிடுகின்றது. மாவலியிடம் வரம் பெற்று உயரமாய் வளர்ந்து நின்று மூன்று அடிகளால் உலகனைத்தும் அளந்த மேன்மை பொருந்திய குற்றமில்லாதவனாகிய நாராயணன் பெயரைப் பாடி நம் நோன்பை கடைப்பிடித்து நீராடுவோம். அவ்வாறு செய்தால் தீமைகள் நீங்கி நாடு முழுவதும் மாதம் மும்மாரி பெய்யும். வயலின்கண் கயல் மீன்கள் துள்ளும், குளத்தில் குவளை மலர்களும், மலரின்கண் தேன் உண்ட வண்டுகளும் மயங்கி உறங்கும். பசுக்களின் மடியிலிருந்து பால் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்.

**ஆழி மழைக் கண்ணா**

உலகில் மழை பெய்ய வேண்டுதல் மட்டுமன்றி, அம்மழைக் கடவுளுக்கு கட்டளை இடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. அவ்வாறு பெய்யும் மழையானது கஞ்சத்தன்மையன்றி வள்ளலைப் போல இருக்க வேண்டும். நாராயணனின் மேனி போன்றுள்ள மேகமே, அவனது கையிலுள்ள சக்கரத்தைப் போல மின்னியும், சங்கைப் போல இடி இடித்தும், அம்பைப் போல மழை பொழிய வேண்டும். அத்தகைய மார்கழி நீரிலே மகிழ்ந்து நாங்கள் ஆட வேண்டும் என்கிறார்.

**மாயனை**

மாயனை என்ற சொல் மக்களின் பாவங்களைப் போக்குபவன் என்ற பொருளின்கண் அமைந்ததாகும். மாயச் செயல்களைச் செய்பவன். மதுரையில் தோன்றியவன். யமுனை ஆற்றங்கரையில் உறைபவன்.

ஆயர்குலத்தின் அணி விளக்காக இருப்பவன். தன் தாய்க்குச் சிறப்பை தேடிக் கொடுத்தவன். இத்தகைய சிறப்புடைய கண்ணபிரானின் பாதங்களை மலர் தூவி வணங்கி, வாயால் திருநாமத்தை கூறி, மனத்தில் அவனையே நினைத்திருந்தால் எல்லாப் பாவங்களும் நெருப்பில் இட்ட தூசியைப் போன்று அழியும்.

**புள்ளும், சிலம்பின காண்!**

பறவைகளுள் எழுந்து ஒலியெழுப்புகின்றன. கருடனின் தலைவனான பெருமாளின் கோயிலில் வெள்ளைச் சங்கை ஊதுகின்றனர். தவமுனிவர்களும், யோகிகளும் ஹரி, ஹரி என்று கூறுகின்றனர். இவையாவும் பொழுது விடிந்ததற்கான அடையாளங்களாக உன் காதுகளில் கேட்கவில்லையோ? கம்சனின் கட்டளைப்படி பூதகை என்னும் பேய்மகள் நச்சுப்பாலைக் கொடுக்க அவளைக் கொன்றவன். சகடா சூரன் என்ற அரக்கனை அழித்தவன். இத்தகைய சிறப்பு மிக்க கண்ணனை வழிபட எழுந்து விரைந்து வருவாயாக.

**கிசு கிசு என்று**

கிசு, கிசு என்று பறவைகள் தன் துணையிடம் பேசும் ஓசை கேட்கவில்லையோ, பேய்ப் பெண்ணே ஆய்ச்சியர்கள் தங்கள் கழுத்தில் காசுமாலை என்னும் அச்சுத்தாலியையும், ஆமைத்தாலியையும் அணிந்தபடி தயிர் கடையும் ஓசை கேட்க வில்லையோ? பெண்களுக்கெல்லாம் தலைமையானவளே! நாராயணனை புகழ்ந்து பாடும் மொழிகள் உன் காதுகளில் விழவில்லையா? விரைந்து வந்து கதவைத் திறப்பாயாக.

**கீழ் வானம்**

கீழ் வானம் வெளுத்து விட்டது. எருமைகளும் பனிப்புல் மேய்ந்துவிட்டன. நாங்கள் எல்லோரும் பாவை நோன்பு நோற்கவே நீராடச் செல்கின்றோம். உன்னை விட்டுச் செல்லுதல் முறையாகாது என்பதால் எழுப்பிக் கொண்டிருக்கின்றோம். குதிரை வடிவில் வந்த அசுரரையும் கம்சனால் அனுப்பப்பட்ட மல்லர்களையும் கொன்றவன் கண்ணன் என்பது நாடறிந்த செய்தியாகும். அத்தகைய இறைவனை வழிபட்டால் நற்பயன் பெறலாம்.

## தூமணி மாடத்து

குற்றமில்லாத இரத்தினங்களால் அமைந்துள்ள மாளிகையின் ஒரு படுக்கையறையில் படுக்கையைச் சுற்றி நாற்புறமும் விளக்குகள் எரிகின்றன. அகில் முதலான நறுமணப் பொருட்களின் மணம் வீசுகின்றது. இத்தகைய செல்வச் செழிப்பில் மெத்தையில் உறங்கும் மாமன் மகளே! மணிகள் பதிக்கப்பெற்ற கதவைத் திறப்பாயாக. இவ்வாறு எழுப்பியும் எழுந்திராத உன் மகளை மாமா நீர் எழுப்பிட வேண்டும். அவள் ஊமையோ, செவிடோ அல்லது ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றாளோ தெரியவில்லை. தூக்கம் என்னும் மந்திரத்தால் கட்டுண்டு கிடக்கின்றாளோ தெரியவில்லை. எதுவாயினும் விரைவில் எழுந்து வருமாறு உரைக்கின்றாள்.

## நோற்றுச் சுவர்க்கம்

முன் பிறவியில் கண்ணனை வணங்கி நோன்பு நோற்று இப்பிறவியில் மகிழ்ச்சியாக வளரும் பெண்ணே! நாங்கள் உன்னை எழுப்பியும் எழுந்திருக்கவில்லை. எழாவிட்டாலும் சரி பதில் கூடவா கூற மாட்டாய்? மணமிக்க துளசி மாலையை தலையிலே அணிந்திருக்கும் நாராயணன் நாம் வேண்டிய வரங்களைத் தருவான். முன்பு இராமனால் வெல்லப்பட்ட கும்பகர்ணன் உனக்குத் தூக்கத்தை கொடுத்தானோ? சோம்பல் மிக்கவளே! கிடைப்பதற்கரிய அணிகலன் போன்றவளே! துயில் கலைந்து எழுந்து வந்து கதவைத் திறப்பாயாக!

## கற்றுக் கறவை

ஆயர்குல மக்களுக்கு பசுக்களில் இருந்து பால் கறக்க மட்டுமல்ல, போர் செய்யவும் தெரியும். பிறருக்கு நன்மையை மட்டுமே செய்யும் இவர்களுக்கு பகைவர்கள் உண்டா என்றால் நிச்சயம் உண்டு. கண்ணனை வணங்காதவர்களே ஆயர்களின் பகைவர்கள் ஆவர். அத்தகு சிறப்புமிக்க ஆயர்குடியில் பிறந்த பெண்ணே! கொடி போலும், மயில் போலும் இருப்பவளே விரைந்து வந்து கதவைத் திறப்பாயாக!

## இளங் கற்றெருமை

ஆயர்கள் பால் கறக்காமல் போய்விட, எருமைகள் கண்ணனை நினைத்தபடி தானாகவே பால் சுரக்கின்றன. அதனால் அவ்விடம் யாவும் சேறாயிற்று. அத்தகைய சிறப்புடைய செல்வந்தரின் தங்கையே! எங்கள்

**அங்கண்மா ஞாலத்து**

இப்பெரிய உலகம் நம்முடையது என்று எண்ணிய அரசர்கள் பலரும் உன்னைச் சரணடைந்தனர். அதைப்போல நாங்களும் உன் திருக்கல்யாண குணங்களில் மனதைச் செலுத்தியபடி உம்மையே வந்து சேர்ந்தோம். கிண்கிணியின் வாயைப்போல மலர்ந்திருக்கும் உன் திருமுகத்தில் உள்ள சிவந்த கண்கள் எங்கள் மேல் பதிய வேண்டும் என்று ஏங்குகின்றோம். சந்திரனும் சூரியனும் ஒரு சேர உதித்தன போல உன் கண்களால் கருணை காட்டினால் எங்களை நீ கண்ணெடுத்தும் பார்க்கவில்லை என்ற சாபத்தில் இருந்து விடுபடுவோம். எனவே இரக்கம் காட்டுவாயாக!

**மாரி மலை முழைஞ்சில்**

நல்ல மழைக் காலத்தில் ஆண்மையுள்ள சிங்கமொன்று மலைக் குகையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தது. உறக்கம் தெளிந்தபின் தீப்பொறி போன்ற தன் பார்வையை எல்லா பக்கங்களிலும் செலுத்திய படியும், பிடரி மயிர்கள் பொங்கும் படியும், சோம்பல் முறித்து, தன் பெருமை தோன்ற கம்பீரத்தோடு எழுந்து விடும். அதைப்போல கண்ணனே! காயம்பூ வண்ணனே! நீயும் நாங்கள் இருக்குமிடத்தில் எழுந்தருளி சிறப்புமிக்க சிம்மாசனத்தில் வீற்றிருப்பாயாக!

**அன்று இவ்வுலகம் அளந்தாய்**

மாவலி சக்கரவர்த்தியிடம் மூன்று அடி மண் கேட்டு உலகை அளந்த திருவடிகளைப் போற்றுகின்றார்கள். சீதா பிராட்டிக்காக தென்னிலங்கைக்குச் சென்று அரக்கர்களின் குலத்தை வேரோடு அழித்தவன். கம்சனால் ஏவப்பட்டு வந்த சகடாசுரனை அழித்தவன். எப்படிப்பட்ட பகையையும் வெற்றி பெறும் இயல்பை உடையவன். இத்தகைய பல்வேறு சிறப்புகளைக் கொண்டவனே! பாவை நோன்புக்குரிய பறையைக் கொடுத்து இரக்கம் காட்டுவாயாக!

**ஒருத்தி மகனாய்ப் பிறந்து**

கண்ணபிரானே! நீ தேவகிக்கும், வசுதேவனுக்கும் மகனாய்ப் பிறந்து கம்சனால் கொல்லப்படுவாய் என்று திருஆயர்பாடியில் யசோதை நந்தகோபனால் வளர்க்கப்பட்டாய். அத்தகைய கொடுங்கோலனான கம்சனின்

## அலகு - 4

# 7. அருணகிரிநாதர் - திருப்புகழ்

(திருஆவினன்குடி - 104, 105, 106, 107, 108 பாடல்கள்)

### அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு

தென்னிந்திய மாநிலமான தமிழ்நாட்டில் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து முருகக் கடவுளின்மீது பாடல்களை இயற்றிப் புகழ்பெற்ற அருளாளர்.

| | | |
|---|---|---|
| இவரது ஊர் | - | திருவண்ணாமலை |
| தந்தையார் பெயர் | - | திருவெங்கட்டார் |
| தாயார் | - | முத்தம்மை |

இவருக்கு ஒரு தமக்கையார் இருந்தார். திருமணம் செய்து கொள்ளாமல் தம்பியின் வாழ்க்கையையே நினைத்துத் தம்பிக்குச் சேவை செய்து வந்ததாய்ச் சொல்வதுண்டு. அருணகிரிநாதரின் தமக்கையார் மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்ததால் இவர் சிறு வயதில் இருந்தே தீய செயல்களில் ஈடுபட்டார். உரிய வயதில் திருமணம் ஆகியது. ஆனாலும் அவரது செய்கைகளில் மாற்றம் இல்லை. அவரது தமக்கை ஒரு நாள் கடுமையாகப் பேச இவர் வீட்டை விட்டு வெளியேறிக் கால் போனபோக்கில் சென்றார்.

ஒரு பெரியவர் இவரைக் கண்டு 'குண்டுதோறாடும் குமரக் கடவுளைப் பற்றிக் கூறி ஆறெழுத்து மந்திரத்தின் உட்பொருளையும் சரவணபவ என்னும் சொல்லின் தத்துவத்தையும் விளக்கி, குமரனைப் போற்றிப் பெருவாழ்வு வாழச் சொல்லி ஆசிர்வாதம் செய்தார் என்றாலும் அருணகிரிநாதர் செவி மடுக்கவில்லை. மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து திருவண்ணாமலைக் கோபுர வாயிலின் மேலே ஏறி அதிலிருந்து கீழே குதித்து தம் உயிரை விட முற்பட்டார். அவர் கீழே குதித்தபோது இரு கரங்கள் அவரைத் தாங்கின. அந்த கரங்களுக்குச் சொந்தக்காரர் வேறு யாரும் அல்லர். குன்றுதோறாடும் குமரனே. தன் கைகளால் அவரைத் தாங்கி 'அருணகிரி நில்' என்றும் சொன்னார். திகைத்த அருணகிரி தம்மைக்

இங்கும் திரிந்து, நெஞ்சம் கவலை கொண்டு அறிவு கலங்க, வெகுதூரம் போய் அலைந்து, திரிந்து, மனம் நொந்து, பின்பு வாடி நைந்து, என்னுடைய ஆவி கொதித்து வாடும் ஆசை மயக்கம் கொண்டு அலையும் எனது புத்தி என்னை விட்டு விலகிப் போக வேண்டும். இதனை

*"வேயி சைந்தெழு தோள்கள் தங்கிய*
*மாதர் கொங்கை யிலேமு யங்கிட*
*வீணி லுஞ்சில பாத கஞ்செய-அவமேதான்*
*வீறு கொண்டு னேவ ருந்தியு*
*மேயு லைந்தவ மேதி ரிந்துள*
*மேக வன்றறி வேக லங்கிட-வெகுதூரம்"*

என்று பாடுகின்றார்.

மலர்களையும் கங்கைநீரையும் நிறைய கொட்டி, இரண்டு தாமரை போன்ற பாதங்களையும் வணங்கி பூஜை செய்யும்படி முருகனே நீ அருள் புரிய வேண்டும். நெருப்பு பற்றி எழும்படி இலங்கையில் இராவணனுடைய தலைகளை அரிந்து அவனுடைய சேனைகள் அழிந்து போகும்படி செய்த திருமாலினுடைய மருமகனே! உலகத்தையே ஆண்ட சூரனை வென்ற முருகனே! தேவர்கள் தங்களுடைய நாட்டை ஆளும்படி செய்தவன் முருகன்! இந்திரனுக்கு தனது உரிமையை பெற்றுத் தந்தவன் முருகன்.

உலகத்திற்கு எல்லாம் தாய், சுந்தரி நீல நிறம் படைத்த காளி, பொன்னிறம் படைத்த பிங்கலை, உயிர்களுக்கு போகத்தை ஊட்டும் பிரகாச வடிவினன், திரிசூலத்தைத் தரித்தவனே! சுத்த மாயையாம் சத்தி, ஆதி, அம்பிகை வேத நாற்பொருளானவள். சிவபெருமானுக்கு இடது பாகத்தில் அமர்ந்திருப்பவளே! நஞ்சு உண்ட சிவபெருமானை வணங்க ஒரு ஞானபதேசத்தை மகிழ்ச்சியுடன் அளித்த பெருமாளே! திருவாவினன்குடி என்னும் தலத்தில் விளங்கும் பெருமாளே!

ஆண்டருள்க!

நான்கு இதழ்களை உடைய தாமரையான மூலாதாரத்தில் வீற்றிருக்கும் விநாயக மூர்த்தியும், ஆறு இதழ்களை உடைய தாமரையான சுவாதிஷ்டானத்தில் வீற்றிருக்கும் பிரமதேவனும், பத்து இதழ்த் தாமரையாம் மணிப்பூரகத்தில் வீற்றிருக்கும் திருமாலும், பன்னிரண்டு இதழ்த் தாமரையாம் அனாகதத்தில் வீற்றிருக்கும் ருத்திரனும், அனாகதத்துக்கு மேலே பதினாறு இதழ்த் தாமரை வடிவாய் அடிநாவில் விசுத்தியில் இருக்கும் மகேசுரனும் ஆறு ஆதார வழியே போய் முற்றும் உணர்ந்த தியான மூர்த்தியான நிலையில் ஞான தாமரையாசனத்தில் விளங்குகின்ற மௌன சுந்தர ரூபியாக விளங்கும் யோக நாயகனே எனை ஆண்டருளுவாயாக.

**நன்றி பாராட்டல்**

அழகிய குங்குமம், பச்சைக் கற்பூரம், நவமணிகள், தக்க சந்தனம், பவள வடங்கள், செண்பகப்பூ, குளிர்ந்த மகிழம்பூ, செங்கழுநீர்ப் பூ, மாலை, சங்கிலி ஆகியன விளங்கும் கழுத்தொடு கூடியவராய், அணிகலன்களையும், பலவித ஒப்பனைகளையும் கொண்ட பொதுமகளிருடைய பால், பழம், சர்க்கரை, பரிசுத்தமான தேன் என்று சொல்லும்படியான பொருள்களையும் பெரும் பாவத்தைத் தரும் பொருட்கள் எனக் கருதி விருப்பங் கொள்ளாமல், உட்கொண்டு முருகனின் பாதத் தாமரைகளை நெஞ்சிற் பொருந்த திருப்புகழை ஒவ்வொரு நாளும் தவறாமல் பாட வேண்டும் என்ற அன்பை வயலூரில் அருளியவன் முருகப் பெருமான். இதனை

*பாலு டன்கனி சர்க்கரை சுத்தந்*
*தேனெ னும்படி மெத்தரு சிக்கும்*
*பாத கம்பகர் சொற்களிலிட்டம்*

என்று விளக்குகிறார்.

உலகத்தை படைத்த பிரபுவாகிய பிரமன் தனக்கு ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை கற்றுத் தந்தவன் முருகன் என்று மதித்து நடக்கவும், முழங்குகின்ற கடல் வற்றிப் போகவும், மணல்கள் எட்டும் நிலைகுலையவும், கிரவுஞ்ச மலை தூளாகவும், சூரன் பொடிபடவும், போரிற் பயிற்சி கொண்ட திருக்கையை அசைத்துச் செலுத்திய ஒப்பற்ற வேலனே நஞ்சை உண்ட கழுத்தில் ருத்ராட்க்ஷ மாலைகளையும் தேவர்களுடைய எலும்பு மாலைகளையும் வரிசையாக அணிந்து சுடுகாட்டில் பிணங்களிடையே சென்று ஆடும், உலகுக்கெல்லாம் தந்தையாகிய சிவபிரான் மகிழும் குருநாதனே! பொன்னால் ஒப்பனை செய்யப்பட்ட அழகிய கலசங்கள் வைத்துள்ள, கோபுரங்களின் உச்சியில் விண்மீன்கள் தங்குகின்ற திருஆவினன்குடி மலையில் நின்று விளங்கும் பெருமாளே! திருப்புகழைத் தினமும் பாடும் சிறப்பை தருவாயே!

**அருளைப் பெற**

தீமைகள் செய்வதால் ஏற்படும் நிந்தனைகளுக்கு ஆளாகி அலையாமலும் நன்னெறியை அறியாத வஞ்சகர்களுடன் இணங்குவதைக் கருதாமலும், நீ எனக்கு அருளிய உபதேச மந்திரப் பொருளையே துணையாகக் கொண்டு உன்னை நான் நினைத்து உனது திரு அருளைப் பெற மாட்டேனா! யானையின் சிறந்த முகத்தையுடைய கணபதிக்குத் தம்பியே! இமயராஜன் மகளாகிய பார்வதிதேவியின் பிள்ளையே! ஜெய மாலை ஒன்றை தந்த சற்குருநாதனே! திருவாவினன்குடியில் வீற்றிருக்கும் பெருமானே! உனது அருளை எங்களுக்குத் தந்தருள்வாயாக! என்று முருகனைப் பாடுகிறார்.

மனதில் பாரமாய் எழுந்து மலைபோல உயர்ந்து பச்சைக் கற்பூரம் முதலியவற்றை அணிந்து மரணத்தைத் தரவல்ல மாதர்களின் கொவ்வைக் கனி போன்ற இதழ்களைக் கண்டு மகிழ்ந்து அவர்களை விடாது உறுதியாக அணைத்து கைப்பொருள் எல்லாவற்றையும் இழந்து தளர்வடைந்து, மனம் தளர்ந்து, விக்கல் எழுந்து அளவின்றி அழிவுற்றுச் சுக்கு போலாகி எல்லாம் அழிந்து, மெலிவு தரும் நோயை விலக்கி, சேம நிதி எல்லாம் நீயே என உணர்ந்து உன்னை புகழ மாட்டேனோ? என்கிறார். இதனை,

# 8. திருவருட்பா

(6ஆம் திருமுறை, சுத்த சன்மார்க்க வேண்டுகோள் 'அப்பா நான் வேண்டுதல்' - 10 பாடல்கள்)

## ஆசிரியர் வரலாறு

தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தின் வடமேற்கே இருபது கிலோ மீட்டர் தொலைவில், கடலூருக்கு அருகே அமைந்திருக்கும் மருதூர் என்னும் ஒரு சிறிய கிராமம் உள்ளது. அந்த ஊரின் கணக்குப் பிள்ளையாகவும் ஆசிரியராகவும் விளங்கியவர் இராமையா. இவர் மனைவியின் பெயர் சின்னம்மையார்.

இராமையாவுக்கு ஆறாம் மனைவியாக வாழ்க்கைப்பட்டவர் சின்னம்மையார். அவருக்கு முன் திருமணம் செய்த ஐந்து மனைவியருக்கும் குழந்தைபேறு இல்லாது இறந்துவிடவே இராமையா இவரை ஆறாம் மனைவியாக மணம் புரிந்தார். இராமையா-சின்னம்மை தம்பதிக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. சபாபதி, பரசுராமர் என்ற ஆண் குழந்தைகளும் உண்ணாமுலை, சுந்தரம்மாள் என்ற பெண் மக்களும் பிறந்து, ஐந்தாவதாக 1823ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ஆம் நாள் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு இராமலிங்கம் எனப் பெயர் சூட்டினர்.

பிறந்த குழந்தைகளை முதன்முதலில் கோயிலுக்கு எடுத்துச் சென்று வழிபடுவது அக்கால வழக்கம். அவ்வாறே இராமலிங்கம் அவதரித்த ஐந்தாம் மாதம் இராமையா தன் மனைவி மக்களுடன் சிதம்பரத்துக்குச் சென்று வழிபட்டார். சிதம்பரத்தில் உள்ள சிற்சபையில் நடராஜப் பெருமாளை வழிபட்ட போது சிதம்பர ரகசியம் என்னும் திரையைத் தூக்கி தரிசனம் காட்டப் பெற்றது. அனைவரும் தரிசித்தனர். அந்த சமயம் கைக்குழந்தையாகிய இராமலிங்கமும் தன்னுடைய தாயின் கரங்களில் இருந்துகொண்டு தரிசித்தார். அனைவருக்கும் இரகசியமாய் இருந்த சிதம்பர ரகசியத்தைப் பார்த்த குழந்தை இராமலிங்கம்

**அப்பா என்றழைத்தல்**

அப்பனே! என் வேண்டுதலை கேட்டு அருள்புரிய வேண்டும். உலகிலுள்ள எல்லா உயிர்களிடத்தும் நான் அன்பு செலுத்துதல் வேண்டும். எப்போதும் எவ்விடத்திற்கும் சென்று என் தந்தையாகிய உன் புகழை கூறிடல் வேண்டும். சுத்த சிவ மார்க்கத்தின்கண் நிற்க அருள்புரிய வேண்டும். நான் ஏதாவது தவறு செய்தாலும் நீ, மன்னித்து அருள வேண்டும், இறைவனே! உன்னை பிரியாத நிலையும் வேண்டும் என்கிறார்.

**ஐயா என்றழைத்தல்**

ஐயனே! என் வேண்டுதலை கேட்டு அருள்புரிய வேண்டும். உந்தன் அடியையும், முடியையும் நான் காணும் பேரின்பத்தை வழங்க வேண்டும். பொய் கூறாமல் இருக்க வேண்டும். சொன்ன சொல்லைத் தவறாமல் செய்ய வேண்டும். ஜோதி வடிவாய் உன்னை வணங்க வேண்டும். இறந்தவர்களை உயிர்ப்பிக்க வேண்டும். பாவத்தில் சிக்காது என்னுயிரைக் காத்தல் வேண்டும் என் தலைவனே! உன்னை பிரியாதிருக்க வேண்டும் என்கிறார்.

**அண்ணா என்றழைத்தல்**

அண்ணா! என் வேண்டுதல் கேட்டு அருள் புரிய வேண்டும். என்றும் அழியாத தனியொரு வடிவம் நான் பெறுதல் வேண்டும். நினைக்கும் போதெல்லாம் உன்னைக் கண்டு மகிழ்தல் வேண்டும். உன்னை பற்றி மற்றவர் காணாத காட்சிகளை எல்லாம் நான் கண்டு மகிழ வேண்டும். உன்னை இசையால் நான் உன்னை பாட, நீ கூத்தாடி மகிழ வேண்டும். உன்னை வழிபடுபவர்களின் துயரைப் போக்க வேண்டும். உன்னை பிரியாது நான் இருக்க வேண்டும் என்கிறார்.

## அத்தா என்றழைத்தல்

அத்தா என்பது தந்தையைக் குறிக்கும் சொல்லாகும், அத்தன் என்பதன் வடிவம் காலப்போக்கில் அத்தா என்று சுருங்கிற்று எனலாம்.

தந்தையே! என் வேண்டுதல் கேட்டு அருள்புரிய வேண்டும். உன் அருட்பெருஞ்சோதியைக் கண்டு உள்ளம் மகிழ்தல் வேண்டும். இறந்தவர்களை மீட்டெழுப்பிடல் வேண்டும். எம்மை உன்னுடைய திருச்சபைக்கே அடிமையாக்கிடல் வேண்டும். உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடுகளின்றி உலகமானது இயங்கிடல் வேண்டும். எக்காலத்திலும் அழியாமல் நானும் என் தாயும் இருந்திடல் வேண்டும் என்கிறார்.

## அரசே! என்றழைத்தல்

அரசே என்பது அரசன் என்பதனைக் குறிக்கும் சொல்லாகும்.

அரசே! என் வேண்டுதல் கேட்டு அருள் புரிய வேண்டும். உன் அருட்பெருஞ்சோதியை கண்டு உள்ளம் மகிழ்ந்திடல் வேண்டும். ஒழுக்க நெறியின் கண் உலகமானது இயங்கிடல் வேண்டும். இறந்தவர்களை உயிர் பெறச் செய்ய வேண்டும். கொலை செய்தல், புலால் உண்ணுதல் இன்றி எல்லா உயிர்களையும் தன்வசம் ஆட்கொண்டு மகிழ்வித்தல் வேண்டும். மேலும் என் தாயும் நானும் ஒன்றாகி எப்போதும் இருத்தல் வேண்டுமென்று எண்ணுகின்றார்.

## அடிகேள் என்றழைத்தல்

அடிகேள் என் வேண்டுதல் கேட்டு அருள் புரிந்திடல் வேண்டும். உலகத்தையும் உலகத்து உயிர்களையும் கண்டு உன் கருணை பொழிந்திட வேண்டும். தேவர்களும் உலக உயிர்களும் சுத்த சிவநெறி அடைந்திடல் வேண்டும். படைத்தல் முதலான ஐந்து தொழில்களையும் நான் செய்திடல் வேண்டும். மேலும் என் தாயும் நானும் ஒன்றாகி எப்போதும் இருத்தல் வேண்டுமென்று எண்ணுகின்றார்.

### அம்மா என்றழைத்தல்

அம்மா! என் வேண்டுதல் கேட்டு அருள் புரிந்திடல் வேண்டும். நான் ஆணவமின்றி இருத்தல் வேண்டும். மாலையணிந்த உன்னை வணங்கும் தத்துவங்கள் எப்போதும் என்வசம் உள்ளன. அதனால் தீமையின்றி இருத்தல் வேண்டும். இவ்வுலக பற்றுகள் இன்றியும் நான் இருத்தல் வேண்டும். உலக அறிவாகவும், அனுபவ அறிவாகவும் இறைவா நீ இருத்தல் வேண்டும். மேலும் நானும், என் தாயும் சார்ந்திருக்கும் தன்மை எந்நாளும் வேண்டும் என்று எண்ணுகின்றார்.

### அச்சா என்றழைத்தல்

அச்சா என்பதற்கு ஒளிவடிவானவன் என்பது பொருள்.

ஒளி வடிவானவனே! என் வேண்டுதல் கேட்டு அருள் புரிய வேண்டும். நான் செய்த பாவங்கள் என்ன என்பதை நான் அறிந்திடல் வேண்டும். அப்பாவமானது என் உடலை பாதித்தாலும் எக்காரணத்தின் அடிப்படையாலும் ஆன்மாவை பாதிக்காது இருத்தல் வேண்டும். என்னிடத்தில் நான் அன்பு செலுத்துதல் போலவே பிறரிடத்திலும் அன்பு செலுத்திடல் வேண்டும். உலக மக்களெல்லாம் சமய வேறுபாடுகள் தவிர்த்து அனைத்து உலக மக்களும் சன்மார்க்க நெறியை பொதுவாக பின்பற்றுதல் வேண்டும். அத்தகு இறைவனை நான் பிரியாதிருக்க வேண்டும் என்கிறார்.

### அறிவா என்றழைத்தல்

என் வேண்டுதல் கேட்டு அருள் புரிந்திடல் வேண்டும். ஐந்தொழில்களையும் அறிந்து உலக உயிர்களிடத்தில் அருளுடன் நடக்க வேண்டும். சித்தாந்த வேதாந்த முறையில் சிறந்து விளங்குதல் வேண்டுதல். எப்போதும் என் எண்ணத்திலே நீயிருந்து அருளுதல் வேண்டும். எல்லாம் வல்ல சித்திகளை எனக் களித்தல் வேண்டும். எப்போதும் என்னோடு நீ நீங்காதிருத்தல் வேண்டும். உன் புகழ்பாடி நான் நடனமாட வேண்டுமெனக் கூறுகின்றார்.

# 9. கண்ணதாசன் - இயேசு காவியம்

(பாடுகளின் பாதை 125, 128, 129, 130, 133, 135, 136, 137, 138, 139 பாடல்கள்)

ஆசிரியர் குறிப்பு

கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா ஆகும். இவர் தமிழ்நாட்டில் உள்ள காரைக்குடி அருகே சிறுகூடல்பட்டி என்ற ஊரில் தன வணிகர் செட்டியார் மரபில் பிறந்தார். இவருடைய பெற்றோர் சாத்தப்பன், விசாலாட்சி. இந்த தம்பதிகளுக்கு எட்டாம் மகனாக பிறந்தார். இவர் தொடக்கக் கல்வியை சிறுகூடல்பட்டியிலும், அமராவதிபுதூர் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரையிலும் படித்தார். 1943 ஆம் ஆண்டில் திருவொற்றியூர் ஏஜாக்ஸ் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். ஒரு பத்திரிகை ஆசிரியர் பணிக்கு சென்றபோது அவர் வைத்துக்கொண்ட புனைப்பெயர் கண்ணதாசன்.

திரைப்பட உலகிலும், இலக்கிய உலகிலும் தன்னிகரில்லாத சாதனை புரிந்த கண்ணதாசனின் வாழ்வு எப்படி வாழலாம் என்பதற்கான பாடம் இல்லை. எப்படி வாழக்கூடாது என்பதற்கான பாடம். அரசியலையும் அவர் விட்டுவைக்கவில்லை.

தமிழ்நாடு அரசு கண்ணதாசனின் நினைவைப் போற்றும் வகையில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் மணி மண்டபம் அமைத்துள்ளது.

## கசப்புறு பாத்திரம்

இரவுக்கும் விடியும் நேரத்துக்கும் இடைப்பட்ட வேளையில் இயேசுபிரான் ஜெபிக்கத் தொடங்குகிறார். அப்போது வானத்து நிலவும், காற்றும் மலரும் விழித்தன. கல்லிலும் ஈரம் கசிந்தது. தனக்கு இறப்பு வருவதை அறிந்த இயேசுபிரான் இறைவனிடம் எல்லாம் உன் விருப்பமே எதுவும் என் விருப்பமில்லை என்று கூறுகின்றார். அதன்பின் ஜெபத்தை முடித்தபடி தோழர்களை நோக்கினார். அவர்களோ ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கின்றனர்.

இயேசுபிரான் அவர்களை நோக்கி உங்கள் கண்களில் உறக்கம் உள்ளதோ? நீங்கள் உறங்கும்போது உங்கள் உள்ளம் கூட உறங்குமோ? உம் கண்களால் கடவுளைக் கண்டு ஜெபம் செய்வீர் உங்கள் உள்ளம் பெற்ற வலிமையை உடல் பெற மறந்துவிட்டது என்று கூறியும் சீடர்கள் யாரும் உறக்கம் கலைந்து எழவில்லை.

இவ்வாறு கூறியும் தூக்கம் கலையாத சீடர்களை விட்டு இயேசுபிரான் நீங்கினார். மீண்டும் தன் ஜெபத்தை தொடங்கினார். அவர் ஜெபம் கண்டு வானத் தூதுவன் வந்து ஆறுதல் கூறினார். தனக்கான இறப்பு நேரம் நெருங்குவதை உணர்ந்த இயேசு பிரான் "எனக்குரிய நேரம் வந்தது, நிகழ்வனவற்றை நினைவில் கொள்ளுங்கள் இறைவனின் மகனான நான் பகைவர் கையில் அடிமைப்பட போகிறேன். நீங்கள் அந்த சூழ்நிலையைக் காண நேரில் வந்தால் வஞ்சக நண்பர்களே ஆவர்" என்றவாறு யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகின்றான் என்பதை உணர்ந்தபடி மனம் வருந்திக் கூறினார்.

## மாபெரும் மீட்பர் நீயோ?

இயேசுபிரான் தன் சீடரான யூதாஸால் முத்தமிட்டுக் காட்டிக் கொடுக்கப்பட்டார். அப்போது பகைவர்கள் அவரைச் சிறைப்பிடித்து தன் தலைவரான அன்னாஸ், கைப்பாஸ் ஆகியோர் முன்னே நிறுத்தினர். சீடர்களோ வேறு வழியின்றி அவையிலே ஒதுங்கி நின்றனர். அச்சீடர்களை பார்த்து நீரெல்லாம் இயேசுவின் வழி வந்த சீடரோ என்று அன்னாஸ் கேட்க அவர்கள் பயத்தில் மறுத்தனர்.

'இறைவனின் கோயில்தனை இடியுங்கள். இடித்த பின்பு மூன்று நாட்களில் மீண்டும் உயர்த்துவேன்' என்று நீ கூறியது குற்றம் தானே என்று கைப்பாஸ் இயேசுவை நோக்கிக் கேட்டார். அவற்றையெல்லாம் கேட்டபடியே இயேசு அமைதியாய் நின்றார். ஆனால் மீண்டும் கைப்பாஸ் இயேசுவை நோக்கி,

*'மாபெரும் மீட்பர் நீயோ?*
*தர்மத்தின் தலைவன் நீயோ?'*

என்றெல்லாம் கேட்டார். அதற்கு இயேசு பிரான் சொன்னார் நீவிர்! ஒருநாள் உங்கள் கண்களில் என்னைக் காண்பீர் என்று பதிலளிக்க, கைப்பாஸ் தன் பொறுமையை இழந்து கத்தினான். ஆடையைக் கிழித்துக் கொண்டான். பலவாறு ஆரவாரம் செய்தபடி இவர் குற்றத்திற்குச் சான்றாய் இச்சொல் ஒன்றே போதும் என்றான். இவ்வாறு கைப்பாஸின் பேச்சுக்களில் தூண்டப்பட்டவர்கள் இயேசுவின் மீது துப்பினார்கள் இயேசுபெருமான் பொறுமை காத்தார்.

## சேவல் கூவும் முன்

இயேசுபெருமான் முதல்நாள் இரவன்று தன் சீடர்களுடன் உணவருந்தும் வேளையில் குறிப்பிட்ட ஒரு சீடரிடம் நாளை காலை சேவல் இருமுறை கூவும் முன், நீ என்னுடைய சீடன் இல்லையென்று மூன்றுமுறை

மறுத்துரைப்பாய் என்றார். அதைப் போலவே இயேசுவின் விசாரணை நடக்கும் வேளையில் நீண்ட கண்களையுடைய பெண் ஒருவர் கேட்க இராயப்பர் முதல் முறையாய் மறுத்தார். சேவலும் முதல் முறை கூவிற்று. மீண்டும் மற்றொருவர் கேட்க நான் இயேசுவின் சீடனல்லன், நானல்லன் என்று மூன்று முறை கூறி முடிக்கவே சேவலும் இரண்டாம் முறையாகக் கூவிற்று. எனவே இயேசு பெருமான் கூறியதை எண்ணி இராயப்பர் கண்ணீர் சிந்தினார்.

### பிலாத்துவின் முன் விசாரணை

இவர் ரோமப் பேரரசனின் பிரதிநிதி ஆவார். இவரிடம் இயேசுவை அழைத்துச் சென்றனர். பிரதிநிதியிடம் இயேசுவைக் குறித்து இவன் ஒவ்வொரு நாளும் கலகங்கள் செய்தவன். நாட்டு மக்களை வரி செலுத்தாமல் இருக்கத் தூண்டியவன் என்று கூறினார்.

இதைக் கேட்ட பிலாத்து, இந்த மத குருக்கள் சொன்னதைப் போல யூதரின் மன்னன் என்று உன்னைக் கூறிக் கொண்டது உண்மை தானே என்று இயேசுவை நோக்கிக் கேட்டார். இயேசுவும் உண்மையென்று ஏற்றுக் கொள்ள அவருக்கு தண்டனை அளிக்க விருப்பமில்லாத பிலாத்து இயேசுவை ஏரோது மன்னனிடம் ஒப்படைத்தார். ஏரோதுவின் ஆளுநர் இயேசுவின் பழைய அங்கியை நீக்கி செவ்வங்கியை அணியக் கொடுத்தான். இதனால் பிலாத்துவிற்கும் ஏரோது மன்னருக்கும் இருந்த பகை மாறி நட்பு ஏற்பட்டது.

### இதோ மனிதன்

இறைமைந்தனான இயேசுபிரானின் துன்பத்தைக் கண்டு நகைக்கும், துன்புறும் மனிதர்களின் வாயிலாக நல்லவர், தீயவர்களை அடையாளம் காட்டுகிறார் கண்ணதாசன். இயேசுவின் தலையில் முள் கிரீடம் சூட்டினர். இயேசுவின் நிலையைக் கண்டு நகைத்தனர். கூட்டமாய்ச் சூழ்ந்து அவர்மேல் துப்பினர். கொச்சைச் சொற்கள் ஆயிரம் பேசினர். மேனி வாளால் பாய்ச்சப்பட்டாலும் தலையில் முள் கிரீடம் வைக்கப்பட்டாலும் குத்துயிரும் கொலை உயிருமாகக் காணப்பட்டார்.

# 10. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள்

(பராபரக்கண்ணிகள் (26-50) 25 பாடல்கள்)

## ஆசிரியர் குறிப்பு

இஸ்லாமிய சித்தர் என்று அழைக்கப்படும் குணங்குடி மஸ்தான் சாகிபு இராமநாதபுரம் மாவட்டம் தொண்டிக்கு வடமேற்கில் பத்து மைல் தொலைவிலுள்ள குணங்குடி என்னும் சிற்றூரில் 1792 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் 'சுல்தான் அப்துல் காதிர்' என்பதாகும். இளமையிலேயே குர்ஆன் மற்றும் இசுலாமிய சமய சாத்திரங்களைக் கற்றுணர்ந்து ஆலிம் (சமயக் கல்வி அறிஞர்) என்னும் பட்டம் பெற்றார்.

பற்றறுத்த உள்ளத்துடனும், தந்தையின் ஆசியுடனும் தம்முடைய பதினேழாம் வயதில் ஞானபூமியாக திகழ்ந்த கீழக்கரைக்குச் சென்று, அங்கு 'தைக்கா சாஹிபு' என்று அழைக்கப்பட்ட ஷைகு அப்துல் காதிரி லெப்பை ஆலிம் ஞானியிடம் மாணக்கராக இருந்து சமய ஞானத்தையும் தவ வழிமுறைகளையும் கற்றுத் தெளிந்தார். 1813 ஆம் ஆண்டில் அவர் திரிசிரிபுரம் சென்று அங்கே மௌலவி ஷாம் சாஹிப் என்பவரிடம் தீட்சை பெற்று ஞானயோக நெறியில் ஆழ்ந்தார். பின்னர் சிக்கந்தர் மலையென அழைக்கப்படும் திருப்பரங்குன்றம், சென்று அங்கே நாற்பது நாட்கள் 'கல்வத்' எனப்படும் யோக தியானத்தில் ஆழ்ந்தார். பின்னர் அறந்தாங்கிக்கு அருகிலுள்ள கலகம் என்ற ஊரில் ஆறு மாதங்களும், தொண்டியில் அவருடைய தாய்மாமனாரின் ஊரான வாழைத்தோப்பில் நான்கு மாதங்களும் தங்கி தியானம் செய்தார். இவ்வாறே சதுரகிரி, புறாமலை, நாகமலை, ஆனைமலை போன்ற மலைகளிலும், காடுகளிலும் நதிக்கரையிலும் தங்கி தவம் புரிந்தார்.

இறைக்காதலால் முற்றும் கவரப்பட்டவராகவும் தெய்வீகக் காதல் ... உலகநடை நீங்கி

பராபரமானவனே! நான் துன்பத்தைத் தரக்கூடிய நல்வினை, தீவினைகளால் அறிவு நிலை கெட்டுத் திரியும் ஆத்மாவுடன் நெல்லும், பதரும் போல நிலையில்லாமல் இருந்தேன்.

பராபரமானவனே! சொல்வதற்கு அரிய ஞான ஒளியாகத் திகழ்பவனே! ஒரு சொல்லான உபதேச மொழியை நீ எனக்குச் செல்வம் நிறையுமாறு சொல்லித் திருவருள் செய்ய வேண்டும்.

பராபரமானவனே! ஒவ்வொரு நாளும் உன்னை வணங்காது முழு அறிவற்றவனாக பைத்திய இயல்பையுடைய நான் ஏன் பிறந்தேன்.

பராபரமானவனே! சுற்றத்தினராலும், உறவின் முறையோர்களாலும், என் பெற்றோர்களாலும் நான் உன்னைப் பிரிந்து விட்டேன்.

பராபரமானவனே! அழகிய வடிவுடையவனே! நீ ஏழையாகிய என்னுடைய முகத்தைப் பார்த்து உன்னடியாகிய என்னை எல்லாக் காலங்களிலும், தீவினையில் மூழ்கி விடாமல் ஆட்கொண்டு அருள் செய்ய வேண்டும்.

பராபரமானவனே! பாவமாகிய உடல் எடுத்து நான் பாவியாய் அலைந்து அதனால் என்னுடைய உயிரானது சீர் அழிவது என்பது உனக்கு அழகாகுமோ?

பராபரமானவனே! என்னிடம் நீ எழுந்தருளமாட்டாயா? அப்படி ஒருமுறையாவது வந்து என்னுடைய முகத்தைக் கொஞ்சம் நீ பார்க்கமாட்டாயா? அதை நீயே சொல்வாய்!

பராபரமானவனே! பார்ப்பதற்கு பல கோணங்களில், பல உயிர்களிலும் நீ நிறைந்திருக்கக்கூடிய அச்செய்தியை யாருமே தெரிந்து கொள்ள முடியாதபடி உள்ளாய்.

பராபரமானவனே! என்னுடைய தந்தையே! எப்படியானாலும் பொல்லாத கொடிய பாவியான நான் ஏன் இந்த உடலை எடுத்தேன்.

பராபரமானவனே! கற்பூரத்திலிருந்து தோன்றும் ஒளியைப் போல, எனக்கு நீ அழகான காட்சி தந்து அருள் செய்து என்னுடைய பழைமையான வினைகள் யாவும் பாழாகுமாறு செய்து என்னை ஆட்கொள்ள வேண்டும்.

பராபரமானவனே! கரும்பே! நவரசமே! கடலில் தோன்றிய அமிர்தமே! என்னுடைய கண்ணின் மணியில் அருமையான பொருளாய் நிறைந்திருக்கக்கூடிய அழகே!

பராபரமானவனே! ஏழை அடியவனான என்னை எவ்விதத்திலாவது கைப்பிடித்து ஆட்கொள்ளாமல் இருப்பது உனக்கு அழகான செயலாகுமோ?

பராபரமானவனே! ஐயனே! எனக்குக் கதியானவனே! என்னை ஆட்கொண்டு அருள் செய்யமாட்டாயா? நான் புலம்புவதையும் கேட்கமாட்டாயா?

பராபரமானவனே! ஊனாகவும், அதில் கலந்துள்ளதான உயிரில் ஒட்டாத கரவாகவும், தானாகவும் இயங்கக் கூடியததுவே!

பராபரமானவனே! தங்கம் முதலான செல்வங்களின் மீது மயக்கம் கொண்டும், அதனால் அறிவு நிலை தடுமாறி, நான் என்ற ஆணவத்துடன் பல காலமும் வளர்வதனால் என்ன பலன் உண்டாகும்?

பராபரமானவனே! என்னையே நான் மறந்து எப்போதும் உன்னையே 'இல்லல்லாஹூ' என்று சொல்லிக் கொண்டிருப்பதற்கான உண்மை ஞானச் சுடரே! தேவனே எனக்குத் திருவருள் செய்ய வேண்டும்.

பராபரமானவனே! அந்தோ! அடியவனான எனக்கு யார் இருந்து என்ன பயன்! கைகளால் என்னைக் கட்டி அணைக்கும் வழியைக் காண முடியவில்லை.

பராபரமானவனே! நான் எத்தகைய இயல்புடையவனாக இருந்தாலும் ஏழையாகிய இந்த அடியவனுக்கு நான் ஆசைப்பட்டதை அடையுமாறு நீ தான் மனமிரங்கித் திருவருள் செய்ய வேண்டும்.

பராபரமானவனே! தூங்கிக் கொண்டிருந்து விட்டு உன்னை வணங்கக் கூடியவர்களின் முகங்களைப் பார்க்கும்போது வேங்கைப் புலியைப் போன்றவனே!

பராபரமானவனே! கண்ணே! என் கருத்தானவனே! என் கண்ணின் மணியே! அடங்காத வெட்டவெளியாக இருக்கக் கூடியவனே! கொதித்தெழுமாறு செய்வாயாக!

- - -